**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.10/2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆதிமூலம் | மதம் | : இந்து |
| த/பெ | : முத்து நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : இலுப்பூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**21.01.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

11. எனது பாட்டி பெயர் மாரியம்மாள் என்றால் சரிதான். எந்த புல எண்ணை மாரியம்மாள் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் புறம்போக்கு நிலத்தை கிரையம் கொடுத்தார். அதன் புல எண் தெரியாது. என் பாட்டி கிரையம் கொடுத்த சொத்தின் நான்கு எல்லை தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் பாட்டி விற்ற சொத்துக்களை தவிர வேறு ஏதாவது சொத்து மாரியம்மாளுக்கு உள்ளதா என்றால் வழக்கு சொத்து என் தாத்தா மாரி நாயுடு பெயரில் இருந்து அவர் மகன்களான பெருமாள் நாயுடு, முத்து நாயுடுக்கு இருந்தது. மாரியம்மாள் புல எண்.60/43 சொத்தைதான் பிரதிவாதிக்கு விற்றார் என்றால் இல்லை. அது மாரி நாயுடு பெயரில் இருந்து பெருமாள் நாயுடு, முத்து நாயுடுக்கு வந்த சொத்தாகும். அது மாரியம்மாள் சொத்து இல்லை.

12. நீதிமன்ற ஆணையவர் வழக்கு சொத்தை அளவீடு செய்ய வந்து மேற்படி புல எண்.60/43ஐதான் அளந்தார் என்றால் ஆமாம். நான் ஏற்கனவே சொன்ன நான்கு எல்லைக்குட்பட்ட சொத்தைதான் நீதிமன்ற ஆணையர் அளந்தார் என்றால் ஆமாம். புல எண்.60/43ன் மொத்த விஸ்தீரணம் சொல்ல முடியுமா என்றால் 2 1/2 செண்ட் ஆகும். மொத்த சொத்தான 2 1/2 செண்டையுமே ஆக்கிரமிப்பு செய்தார்களா என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் வரும்போது பிரதிவாதிகள் அங்கு இல்லை என்றாலும் அவர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்படவில்லை என்றாலும் எனக்கு அதைப்பற்றி தெரியாது. ஆனால் பிரதிவாதிகள் அங்குதான் இருந்தார்கள். பிரதிவாதிகள் அறிவிப்பில்

கையெழுத்து செய்தார்களா என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

13. நில அளவையர், நீதிமன்ற ஆணையர் வரும்போது நானோ, பிரதிவாதிகளோ ஏதேனும் ஆவணம் சமர்ப்பித்துள்ளோமா என்றால் பட்டாவை நிலஅளவையர், நீதிமன்ற ஆணையரிடம் கொடுத்தோம். பிரதிவாதிகளிடம் நிலஅளவையர், நீதிமன்ற ஆணையர் ஏதேனும் ஆவணங்கள் கேட்டு பெற்றார்களா என்றால் எனக்கு அது தெரியாது. பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ள புல எண் தெரியுமா என்றால் அது புறம்போக்கு நிலமாகும். புல வரைபடத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் எனக்கு அது தெரியாது. நில அளவையர், நீதிமன்ற ஆணையர் வரும் போது நாங்கள் புல வரைபடத்தை கொடுத்தோமா என்றால் நாங்கள் பட்டாவை கொடுத்தோம், கிராம நிர்வாக அதிகாரி அவர்களது ஆவணங்களை பார்த்து சொத்து முத்து நாயுடு, பெருமாள் நாயுடுக்கு பாத்தியம் என்று சொல்லி சென்றார்கள்.

14. பிரதிவாதிகளின் வீட்டை நிலஅளவையர், நீதிமன்ற ஆணையர் அளந்தார்களா என்றால் இல்லை. நான் இதற்கு முன்பு நிலஅளவை செய்ய முயற்சி எடுத்தேனா என்றால் பிரச்சனை வந்தபின்புதான் முயற்சி எடுத்தேன். இந்த வழக்கிற்கு பின்பு நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்ததை தவிர அதற்கு முன்பு சொத்தை அளவீடு செய்ய ஏதேனும் முயற்சி செய்தோமா என்றால் ரௌடிகளுடன் வந்து சண்டை போட்டதால்தான் அளந்தேன். அதற்கு முன்பு அளக்கவில்லை. எந்த தேதி, மாதம், வருடம் நான் சொல்வதுபோல் சண்டை நடந்தது என்றால் தேதி தெரியாது. 2014ல் இருந்து பிரச்சனை ஆரம்பித்தது. தேதி மறந்துவிட்டேன். 2014லேயே கம்பி வேலி வைத்துவிட்டார்களா என்றால் ஆமாம். அதற்குதான் பிரச்சனை ஆனது. 2014லேயே நாங்கள் காவல் துறையில் புகார் கொடுத்துள்ளோம் என்றால் ஆமாம். மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தோம் என்றால் ஆமாம்.

15. நீதிமன்ற ஆணையர் வரும் போது என் சொத்தின் நிலவரத்தை மட்டும் சொன்னோமா அல்லது வேறு சொத்துக்களை பற்றி சொன்னோமா என்றால் எங்கள் நிலமான புல எண்.60/43ஐ மட்டும்தான் சொன்னோம். புல எண்.60/43ஐ மட்டும்தான் நிலஅளவையர், நீதிமன்ற ஆணையர் அளந்தார்கள் என்றால் ஆமாம். அ.வ.எண்.9/2021ன் வாதி நாகபூஷணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி

நாகபூஷணத்தின் மனைவி ஜெயலட்சுமி கிராம நிர்வாக உதவியாளராக உள்ளார் என்றால் ஆமாம். தாவா சொத்து ஆதியில் என்ன வகைப்பாடாக இருந்தது தற்போது என்ன வகைப்பாடாக உள்ளது என்றால் எனக்கு தெரிந்து கிராம நத்தமாக உள்ளது. மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்த தேதி சொல்ல முடியுமா என்றால் தேதி தெரியாது. எத்தனை வருடங்களுக்கு முன்பு புகார் கொடுக்கப்பட்டது என்றால் சுமார் 4–5 வருடங்கள் இருக்கும்.

16. அந்த விசாரணைக்கு முடிவு குறித்த ஆவணம் எதுவும் காவல் துறையில் கொடுத்தார்களா என்றால் அவர்கள் கொண்டு வந்த ஆவணங்கள் வேறு புல எண்ணிற்காகும். நாங்கள் வழக்கு சொத்திற்கான ஆவணம் கொண்டு வந்தோம். எனவே அவர்களை திட்டி அனுப்பிவிட்டார்கள். அதன் பின்பு நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் ஆமாம். காவல் துறையில் பிரதிவாதிகளை திட்டி அனுப்பியதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் உரிமையியல் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தை அணுக சொன்னார்கள் என்றாலும் இல்லை. காவல்துறையில் திட்டி அனுப்பிய அன்றே இரவோடு இரவாக அந்த கம்பி வேலியை அமைத்துவிட்டார்கள். அதன் பின்பு நீதிமன்றத்தில் உத்தரவு பெற்றதால் அந்த கம்பி வேலியை நீக்கிவிட்டார்கள்.

17. நீதிமன்ற ஆணையர் பார்க்கும்போது வழக்கு சொத்து கம்பி வேலி இருந்ததா என்றால் இல்லை. ஆனால் வேண்டுமென்றே வீடு கட்டுவதற்காக கடக்கால் தோண்ட தயாராக இருந்தார்கள். நாங்கள் சென்று நிறுத்திவிட்டோம். அவர் கடக்கால்தோண்டவில்லை. நான் அ.வ.எண்.9/2021ன் வாதி நாகபூஷணமும் சேர்ந்து நாகபூஷணத்தின் மனைவி கிராம உதவியாளராக இருப்பதை சாதகமாக எடுத்து கொண்டு ஆவணங்களை திருத்தி சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. இது குறித்து பிரதிவாதிகள் வருவாய் கோட்டாட்சியரிடம் ஜெயலட்சுமி மீது புகார் கொடுத்தார்கள் என்றால் எனக்கு அது தெரியாது. என்னை வருவாய் கோட்டாட்சியர் விசாரித்தாரா என்றால் இல்லை. எனக்கு வருவாய் கோட்டாட்சியரிடம் விசாரணை அறிவிப்பு வந்ததா என்றால் இல்லை. வருவாய் துறை ஆவணங்களில் தவறு உள்ளது என்பதை பொறுத்து எங்கள் அனைவரையும் வருவாய் கோட்டாட்சியர் விசாரித்தார் என்றாலும் நான் வேண்டுமென்றே அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

18. விசாரணை முடிவில் பிரதிவாதிக்கு சாதகமாகிவிடும் என்பது தெரிந்து நாங்கள் நீதிமன்றத்திற்கு வந்துவிட்டோம் என்றால் சரியல்ல. 10.12.1969ல் 3ம் பிரதிவாதி தட்சிணாமூர்த்தி பச்சையம்மாள் வகையறாவிடமிருந்து வழக்கு சொத்தை கிரையம் பெற்று அது முதல் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. அந்த சொத்தில்தான் பிரதிவாதிகள் கம்பி வேலி அமைத்துள்ளார் என்றால் இல்லை. அது புதராக இருந்தது. நீதிமன்ற ஆணையர் வரும்போதுதான் அதை சுத்தம் செய்தனர். அவர்கள் வீட்டிற்கு அருகில் இருப்பதால் அதை சொந்தம் ஆக்க வேண்டி அவ்வாறு செய்கிறார்கள். பிரதிவாதிகளின் கிரைய ஆவணத்தை தெரிந்து கொண்டுதான் புறம்போக்கு நிலத்தை கிரையம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

19. பிரதிவாதிக்கு விற்ற சொத்தை நாங்கள் பொய்யான ஆவணங்கள் வைத்து உரிமை கோருகிறோம் என்றால் நாங்கள் விற்கவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்ய எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் தவறானது என்பதால் அது எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றாலும் தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 முதல் வா.சா.ஆ 5 வரை உள்ள ஆவணங்கள் வழக்கு சொத்துக்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்றாலும் அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)